**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

------

**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI**

**Sessions Case No. 18of 2023**

**Deposition of witness for** : **PW3**

**Name** : **முருகன்**

**Father's Name** : **சன்முகம்**

**Village** : **தளிபட்டி**

**Taluk** : **கிருஷ்ணகிரி**

**Calling** : **ஆயில் இன்ஜின் மெக்கானிக்**

**Age** : **51**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04th day of July 2025.**

**எதிரிகள் ஆஜர் .**

முதல் விசாரணை:

நான் ஆயில் இன்ஜின் மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை பார்த்துள்ளேன். அ.சா.1 மற்றும் 2 யை தெரியும். சுமார் 3 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் கிருஷ்ணன் அவர் நிலத்தில் இருந்த ஆயில் இன்ஜினை ரிப்பேர் செய்வதற்கு கூட்டி சொன்றார் நான் இன்ஜினை கலட்டினேன் அப்போது மாரியப்பன், கிருஷ்ணன் ஆகியோர் இருந்தார்கள். நாங்கள் முன்னாடி வந்துவிட்டோம் சிரிது நேரம் கழித்து கூச்சல்கேட்டது கிருஷ்ணன் மகன் பின்னாடி வந்த போது எதிரிகள் அவரை அடைகட்டி கையருவாளால் பொட்டதால் அவர் மயக்கம்மாகிவிட்டார். கிருஷ்ணன் ஓடினார். அவர் பின்னால் நானும்

மாரியப்பனும் ஓடினோம். அப்போது அங்கே சபை களைந்துவிட்டது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்குவிசாரணை

சத்தம் கூச்சல் கேட்டுதான் நாங்கள் சம்பவ இடத்திற்கு சொன்றோம் என்றால் நாங்கள் போகும்போது யாரும் அங்கு இல்லை. கிருஷ்ணன் மகனை ஆஸ்பிடலுக்கு துக்கி சென்றுவிட்டார்கள். சண்டை நடந்த இடத்திற்கும் என்ஜின் வேலை செய்த இடத்திற்கும் 40 அடி இருக்கும். கிருஷ்ணன் அவர் நிலைத்தை சுற்றி கற்கள் நட்டுயிருந்தார். அந்த இடத்தில் தள்ளு முள்ளு ஏற்பட்டு கிருஷ்ணன் மகனுக்கு அடிப்பட்டு இருக்கலாம் என்றால் இருக்கலாம்.

ஒம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.